வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 5888 /ஆ5/2025, நாள். 26.11.2025

.....

பொருள் பள்ளிக் கல்வி – தமிழ் வளர்ச்சித் துறை– 2021–22ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு – நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களின் பிறந்தநாளன்று ஆண்டுதோறும் மாவட்ட அளவில் பள்ளி மாணாக்கர்களுக்கான பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்குதல் – 2025– 2026ஆம் ஆண்டில் அண்ணல் காந்தியடிகள், ஜவகர்லால் நேரு பிறந்த நாளை முன்னிட்டு பேச்சுப் போட்டிகள் நடைபெறுதல்– தொடர்பாக

பார்வை
1. சென்னை, தமிழ்வளர்ச்சி இயக்குநரின் குறிப்பாணை எண்.ந.க.3601/ ஆ.மொ.4/2025, நாள்:20.06.2025
2. வேலூர் மாவட்ட தமிழ்வளர்ச்சி துணை இயக்குநரின் கடிதம் ந.க.எண்.310/2025, நாள் :20.11.2025

.....

தமிழ் வளர்ச்சித் துறையின் 2021–22ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில். நாட்டிற்காக பாடுபட்ட தலைவர்களான மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, பேரறிஞர் அண்ணா தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் பிறந்தநாளன்று மாவட்ட அளவில் பள்ளி மாணாக்கர்களுக்கு பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும் என்ற அரசின் அறிவிப்பினை செயற்படுத்துமுகமாக மாவட்டங்களில் 2025–26ஆம் நிதியாண்டில் அண்ணல் காந்தியடிகள், ஜவகர்லால் நேரு ஆகியோரின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட அளவில் மாணவ மாணவியருக்கு தனித்தனியே பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசுத் தொகையும், பாராட்டுச்சான்றிதழும் வழங்கப்பட வேண்டும் என்று பார்வை 1இல் காணும் குறிப்பாணையில் அறிவிக்கப்பெற்றுள்ளது.

இதற்கிணங்க எதிர்வரும் திசம்பர் 02 ஆம் நாள் (02.12.2025 செவ்வாய்க்கிழமை) அண்ணல் காந்தியடிகள் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டும் திசம்பர் 03 ஆம் நாள் (03.12.2025 புதன் கிழமை) ஜவகர்லால் நேரு அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டும் வேலூர் மாவட்ட அளவில் பள்ளிகளில் பயிலும் (6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு முடிய) மாணாக்கர்களுக்கான பேச்சுப் போட்டிகள் **வேலூர், அரசு முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி** வளாகத்தில் தனித்தனியே நடத்தப்பெறவுள்ளன.

வேலூர் மாவட்ட அளவில் நடைபெறவுள்ள இப்பேச்சுப் போட்டிகளில் (அண்ணல் காந்தியடிகள், ஜவகர்லால் நேரு) பங்குபெறும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே முதல் பரிசாக ரூ.5000. இரண்டாம் பரிசாக ரூ.3000. மூன்றாம் பரிசாக ரூ.2000 மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பெறும்.

அத்துடன் பங்கேற்கும் மாணவர்களுள் அரசுப் பள்ளி மாணவர்கள் இருவரை மட்டும் ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே தெரிவு செய்து ஒவ்வொருவருக்கும் சிறப்புப் பரிசாக தலா ரூ.2000 மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பெறும்.

**அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் –பேச்சுப்போட்டி 02.12.2025 அன்று முற்பகல் 9.00 மணி தொடங்கியும். ஜவகர்லால் நேருபிறந்தநாள் – பேச்சுப்போட்டி 03.12.2025 அன்று முற்பகல் 9.00 தொடங்கியும் வேலூர் அரசு முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி வளாகக் கூட்ட அரங்கில் நடைபெற உள்ளன**

போட்டிகளில் வேலூர் மாவட்டத்திலுள்ள பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர் **(பள்ளிக்கு இருவர் வீதம் )** மட்டுமே பங்கேற்க முடியும். போட்டிகள் தொடர்பில் அந்தந்தப் பள்ளிகளிலிருந்து போட்டிகளில் பங்கேற்கும் மாணவர் உரிய படிவத்தை நிறைவு செய்து மாணாக்கர்களை போட்டிக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், மாணாக்கர்களுக்கு தெரிவிக்கும் வகையில் போட்டிகளுக்குரிய தலைப்புகள், போட்டிகளுக்கான விதிமுறைகளும், பங்கேற்புப் படிவமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

**இணைப்பு** – போட்டிகளுக்குரிய தலைப்புகள், விதிமுறைகள், பங்கேற்புப் படிவம்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி/தனியார் பள்ளிகள்) வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவல மின்னஞ்சல் மூலமாக)
2. தலைமையாசிரியர்கள்,
   அனைத்து வகை பள்ளிகள், வேலூர் மாவட்டம்.
   (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)

நகல்.

தமிழ்வளர்ச்சி துணை இயக்குநர்,
தமிழ்வளர்ச்சி துணை இயக்குநர் அலுவலகம்,
மாவட்ட ஆட்சியரகம் ,வேலூர் மாவட்டம்.